மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Dalit Poems Expressing Alternative Culture

Dr. S. Vanaja

Assistant Professor, Department of Tamil, Jaya College of Arts and Science, Chennai, India

Manuscript ID : **MT110A0103**

Volume : **3**

Issue : **1**

Month : **March**

Year : **2023**

Received: 29.11.2022
Revised: 18.01.2023
Accepted: 30.01.2023
Published: 06.02.2023

Pages : 8-16

DOI: 10.5281/zenodo.7608982

ABSTRACT:

By refusing to accept structured caste hierarchies of exclusion or marginalization, Dalit poetry claims space for itself, trespasses into forbidden spaces, ridicules what is fabricated as superior as inferior, presents what is marginalized as substandard, observes what is superior and their background. The alternative culture of Dalit people has been exposed in various platforms, like exposing and ridiculing politics. In that way, this article examines only the poems that emphasise the alternative culture of Dalit people in these three magazines: Dalit, New Godangi and Dalit Murasu (1995 to 2000).

The literature expresses the social, economic and cultural elements of the period in which it was created. At the same time, the historical trends of that period should not be forgotten. According to the historical trends of the times, the form, structure and quantity of literature are also subject to change. In that way, Dalit poems have recorded messages about Dalit people in various ways. This article aims to find out whether Dalit people have expressed their pain and needs for cultural change when they are oppressed.

KEYWORDS:

Opposing Old Traditions, Unwrapping of Writing Tradition, Oppressed People, Dalit Poems, Cultural Change, Livelihood of Dalit People

மாற்றுப் பண்பாட்டை வெளிப்படுத்தும் தலித்திய கவிதைகள்

முனைவர் சி. வனஜா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தலித்திய கவிதைகள் ஒதுக்குதல் அல்லது ஒதுங்குதல் என்னும் கட்டமைக்கப்பட்ட சாதிப் படிநிலைகளை ஏற்றுக் கொள்ள மறுப்பதன் மூலம், தங்களுக்கான இடங்களை உரிமையாக்குவது, தடை செய்யப்பட்ட இடங்களுக்குள் அத்துமீறி நுழைவது, உயர்வானது எனப் புனையப்பட்டவற்றைத் தாழ்வானவை என எள்ளி நகையாடுவது, தரமற்றவை என ஒதுக்கியவற்றைத் தரமானவை என முன்னிறுத்துவது, உயர்நிலைகளில் உள்ளவற்றைக் கவனித்து அவற்றின் பின்னணியில் உள்ள அரசியலை அம்பலப்படுத்தி நகைப்பது எனப் பல்வேறு செயல் தளங்களில் தலித் மக்களின் மாற்றுப் பண்பாட்டை வெளிப்படுத்துள்ளன. அந்த வகையில் தலித், புதிய கோடாங்கி, தலித் முரசு (1995 முதல் 2000 வரை) இம்மூன்று இதழ்களில் தலித் மக்களின் மாற்றுப்பண்பாட்டை வலியுறுத்தக்கூடிய கவிதைகளை மட்டும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

இலக்கியங்கள் உருவாக்கப்பட்ட காலத்தின் சமூக, பொருளியல், பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தும். அதே நேரத்தில் அந்தக் காலகட்டத்தின் வரலாற்றுப் போக்குகளையும் மறக்கலாகாது. காலத்தின் நிலைகள் சார்ந்த வரலாற்றுப் போக்குகளுக்கு ஏற்ப, இலக்கியத்தின் வடிவம், கட்டமைப்பு, அளவு ஆகியவையும் மாறிவரக்கூடியனவே ஆகும். அந்தவகையில் கவிதைகள் எனும் தலித்திய கவிதைகளில் தலித் மக்களைப் பற்றிய செய்திகளைப் பலவாறு பதிவுசெய்துள்ளது. அப்பதிவுகள் தலித் மக்கள் அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படும் போது தங்களின் வலிகளையும், மாற்றுப்பண்பாட்டின் தேவைகளையும் வெளிப்படுத்தியுள்ளார்களா என்பதனைக் கண்டறியும் நோக்கத்தில் இக்கட்டுரை அமைய உள்ளது.

கருச்சொற்கள்

பழைய மரபுகளை எதிர்த்தல், எழுத்து மரபைக் கட்டுடைத்தல், ஒடுக்கப்பட்ட மக்கள், தலித் கவிதைகள், மாற்றுப் பண்பாடு, தலித் மக்களின் வாழ்வாதாரம்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டுப் பரிணாம வளர்ச்சியில் இன்று தமிழில் புதுக்கவிதைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் புதுக்கவிதைக்கான நவீனப் பாய்ச்சல் என்பது பல புதுமைகள் கொண்டதாயும், பிற மொழியின் தாக்கமாகவும் அல்லது ஆதிக்கம் கொண்டதாயும் நிலவுகிறது. இவற்றின் வழியே பழைய மரபுகளின் கலாச்சாரத்தையும், சமூக மதிப்பீடுகளையும் விமர்சனங்களால் உள்ளடக்கிய பேராயுதமாய்க் கவிதைகள் இயங்க வேண்டியது காலக்கட்டத்தின் தேவையாய் இருக்கிறது.

அவ்வகையில் படிமங்கள், குறியீடுகள், உத்திகள், தொன்மங்கள் எனக் கவிதை ஒரு குறிப்பிட்ட அளவிலான வட்டத்திற்குள் நிற்காமல் விசாலமான பார்வையை முன்மொழிய வேண்டிய அவசியம் கவிதைக்குள் நிகழ்கிறது.

கவிதை என்பது மண்ணோடு மட்டுமன்று மனிதரோடு பேசும் ஓர் அற்புதக் கருவியாகும். நம் மண்ணும் மண்ணுக்குள்ளான மனித உறவுகளும் பிற படைப்புகள் போல் கவிதை மொழியிலும் பேசியாக வேண்டிய சூழல் இங்கு உள்ளது. அத்தகைய ஈடுபாடுகள் நிறைந்த படைப்புக்கள் சமூகத்தில் நிரந்தரத் தாக்கத்தை ஏற்படுத்துபவையாக உள்ளன. அந்த வகையில் தலித், புதிய கோடாங்கி, தலித் முரசு (1995 முதல் 2000 வரை) இம்மூன்று இதழ்களில் தலித் மக்களின் மாற்றுப்பண்பாட்டை வலியுறுத்தக்கூடிய கவிதைகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

தலித் கவிதைகளின் தன்மைகள்

இதழ்களில் வெளிவந்துள்ள கவிதைகள் பெரும்பாலும் பொருண்மைகளுக்கு ஏற்ப சில குறிப்பிட்ட பண்புகளைத் தமக்குள் கொண்டு அமைகின்றன. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- அம்பேத்கரியத்தைத் (ஒன்று சேர், கலகம் செய், பணிய மறு, திமிறி எழு) தத்துவத் தளமாகக் கொள்வது.
- புனிதம் எனக் கட்டமைக்கப்பட்டுள்ள கருத்துகளை உடைப்பது.
- அதிர்ச்சிகளை உற்பத்தி செய்வதன் மூலம் ஆதிக்கக் கருத்தாடல்களைச் சிதைப்பது.
- மேல் தட்டு மக்களால் உருவாக்கப்பட்ட மொழியைக் கட்டுடைப்பது. இதற்குப் பதிலாகத் தன் பேச்சு மொழியைக் கையாள்வதின் மூலம் கலகக்குரலை அழகியலாக்குவது.

இவ்வாறு தலித் கவிதைகள் பல தன்மைகள் கொண்டிருக்கின்றன.

மாற்றுப் பண்பாட்டை வெளிப்படுத்தும் கவிதைகள்

சாதியச் சமூகத்தின் ஒடுக்குமுறையிலிருந்து பெற்ற வலி தரும் அனுபவங்களையே அன்பாதவன், உஞ்சை ராஜன், ப்ரதிபா ஜெயச்சந்திரன், இந்திரன், மதியழகன், விழி. பா. இதயவேந்தன், கே. ஏ. குணசேகரன், அரங்க மல்லிகா, சுகிர்தராணி, பாரதி வசந்தன், தலித் தமிழ்மணி, இளந்துறவி, தய். கந்தசாமி, தலையாரி, தணிகைச்செல்வன், சுப்பையா, ரவிக்குமார் முதலிய பலரும் கவிதைகளாகப் படைத்துள்ளனர். அந்த அடிப்படையில் மாற்றுப் பண்பாட்டை வெளிப்படுத்தும் கவிதைகள் பெரும்பாலும் இம்மூன்று இதழ்களில் (புதிய கோடாங்கி, தலித் முரசு, தலித்) இடம்பெற்றுள்ளன. சாதிகளின் பெயர்களைச் சொல்வதாலும் ஆதிக்கம் அதிகம் இருப்பதாலும் ஒடுக்கப்படுவதை எதிர்த்து மாற்றுப்பண்பாட்டை உருவாக்க வேண்டுமென்று இக்கவிதைகள் குறிப்பிட்டுள்ளன.

தலித் கவிதைகள் பெரும்பாலும் சுயவரலாற்றுத் தன்மை கொண்டு விளங்குகின்றன. மராட்டியத்திலும் கன்னடத்திலும் இப்படித்தான் வெளிப்பட்டுள்ளன. மறக்கடிக்கப்பட்ட நினைவுகளை, இறந்த காலங்களை நுணுக்கமாகத் தோண்டி வெளியே கொணர்வதன் மூலம் ஆதிக்கச் சக்திகளின் அசிங்கமான முகத்தை, மனிதாபிமானமற்ற முரட்டு இதயத்தைத் தோலுரித்துக் காட்டிவிட முடிகிறது.

தமிழ்மகனின் 'விடியல்' கவிதை தலித் மக்களை விழிப்படையச் செய்வதாக உள்ளது. அபிமானியின் 'குற்றங்கள்', 'முரண்', 'நாளை எரியும் தீ', 'நாய்மோண்ட சுவர்', 'உனக்காகவே அது', 'இப்போதைய என் குரல்' ஆகிய கவிதைகள் அனைத்தும் பல்வேறு நிலைகளில் ஒடுக்கப்படும் தலித்துகளின் குரல்களாகவே ஒலிக்கின்றன. காலம் காலமாக மனிதச் சமூகம் முன்னோக்கிப் பயணித்துக்கொண்டே இருக்கிறது. அடிமைகள் எப்போதும் அடிமைகளாகவே இருப்பதில்லை என்பது வரலாறு. அந்தவகையில் இக்கவிதையில் தலித்துகளின் மாற்றங்களையும் வாழ்நிலைகளையும் நுட்பமாகப் பதிவு செய்துள்ளது.

"புறக்கணிக்கப்பட்ட சாதிகளின்
முகதரிசனத்தை அருவருத்து
அரிப்பெடுக்கும் தன் ஆதிக்க நிர்வாணத்தை
மறைவாய் நின்று
சுகமாய் ஆலாபிக்கும் பெரும் விருப்பத்துடன்
ஆகாயம் முட்ட எழுப்பிக்கொண்ட
சனாதனச் சுவரின் மீது
தன் ஆசை தீரக் கால்தூக்கி
மோண்டுகொண்டு நிற்கிறது

சீமை நாய்களை சிரத்தேசம் செய்துவிட்டு வந்த
வேட்டை நாயொன்று"[1] **புதிய கோடாங்கி செப்.** 08. **ப.** 28

இக்கவிதை உத்தப்புரம் தீண்டாமைச் சுவரின் வன்செயலை வெளிப்படுத்தியுள்ளது.

எப்பொழுதுமே ஒருவர் தனக்கான மொழியை உருவாக்காமல் தனக்கான அழகியலை வடிவமைக்க முடியாது. தலித் கவிதைகள் உயிரோட்டமுள்ள பேச்சு மொழியை அதனுடைய எல்லாவிதமான கூறுகளுடனும் பயன்படுத்த முயல்கின்றன. பேச்சு மொழிதான் உண்மையான தாய் மொழி. எழுத்து மொழி, உருவாக்கப்பட்ட மொழி. அதிகாரம் செலுத்துவதற்காக உருவாக்கப்பட்ட மொழி. எனவே தலித் கவிதைகள் அதிகாரம், புனிதம் போன்றவற்றை உடைக்கும் தன்னுடைய நோக்கத்திற்கேற்பத் தடுக்கப்பட்ட சொல்லாடல்களை, உச்சரிக்கக் கூசுகின்ற உயிர்ச் சொற்களையெல்லாம் கவிதைக்குள் கொண்டு வந்து இறக்குகின்றது.

இக்கூற்றுக்கு ஏற்ப 'அடம்' என்ற கவிதையில் தீண்டாமையை எதிர்த்துப் பேசக்கூடியவளாகப் பெண் சித்திரிக்கப்பட்டுள்ளாள். ஆதிக்கச் சாதிகள், பழங்கதைகள் பேசித் தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்குவதைப் பின்வரும் கவிதை குறிப்பிட்டுள்ளது.

"எளிதில் படம்பிடிக்க முடியாத
உருவத்தினை உடுத்திய
அழுகிப்போன உன் பழமையின் மீது
நின்று கொண்டே ஒண்ணுக்கிருக்கிறார்கள்
எங்கள் குழந்தைகள்"[2] **புதிய கோடாங்கி, செப்.** 07, **ப.** 34

அவர்களின் ஆதிக்கத்தை அழிக்க, புதிய தலைமுறையினர் சேரியில் இருந்து வருகிறார்கள் என்று கவிதை கூறுகிறது.

"தெய்வ குத்தம்" எனும் கவிதையில் பெண் தெய்வம் பழைய மரபுகளைக் கட்டுடைப்பதாகவும், பிராமணர்கள் பெண்களின் மேல் திணிக்கப்படும் கொடுமைகளைப் பொறுத்துக் கொள்ளாமல் மற்றோர் ஆணிடம் வந்து சொல்லக் கூடியதாகவும், அதற்கு அவன் நான் என்ன செய்ய எனக் கேட்டவுடன் அது பழித்துவிட்டு மீண்டும் அவ்விடத்துக்கே செல்வதாகவும் காட்டப்பட்டுள்ளது.

'கனவுகளும், யதார்த்தங்களும்' என்ற கவிதையில் தீண்டாமையின் வலிகளும் தாழ்த்தப்பட்டவர்களின் ஏக்கங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு முதியவர், 2020 ஆம் ஆண்டு வல்லரசாகக் கனவு காணுங்கள் என்று பாடம் நடத்துகிறார். ஆனால் வல்லரசுகள் அணுகுண்டு, ராணுவம், அணு ஆயுதம், செயற்கைக்கோள் என உற்பத்தி செய்து, அறத்தை அழித்து வன்முறையை, அழிவை வலிமைப்படுத்துகின்றன.

வல்லரசாக வேண்டுமென்று, டிஸ்கொத்தெ கிளப்களும், தொழில்நுட்பக்கூடங்களும் உருவாகி வருகின்றன. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை,

"கூடைக் கூடையாய் தலையில்
மலம் சுமக்கிறோம்
கழிவுகள் உதடுகளில் கசிந்து
உருண்டு விழுகிறது"[3] **புதிய கோடாங்கி, செப்.** 07, ப. 49

என்பதாக இருக்கிறது. மலத்தோடு உண்ணுவதும் உறங்குவதுமாகக் காலம் கழிகிறது. வல்லரசுகளின் கனவுகளில் 'மனிதராக நாங்கள் மதிக்கப்படுவோமா?' என்று தாழ்த்தப்பட்ட மக்கள் ஏக்கத்தோடு கேட்பதாக அமைந்துள்ளது இக்கவிதை.

"உங்கள்
வல்லரசுக் கனவுகளில்
என்றேனும் நாங்கள் மனிதர்களாகவாவது
மதிக்கப் படுவோமா?"[4] **புதிய கோடாங்கி, செப்.** 07, ப. 49

'பாபா' என்ற கவிதை தீண்டாமை விழிப்புணர்வை வெளிப்படுத்தக்கூடியதாய், ஆதிக்கச் சாதிகளுக்குப் பதிலடி கொடுத்த அம்பேத்கரைப் பற்றிப் பேசுகிறது. தலைமுறை தலைமுறையாக இருக்கும் சாதிகளை ஒழிக்கப் புதிய பாதைகளை உருவாக்குவோம் என்று அடிமை உணர்வை விலக்க முற்படுகிறது.

"அதிகாரப் பகிர்வே
அரசியலுக்கான விடுதலையென்ற
சூட்சுமத்தை
உணர்த்திச் சென்ற
பாபாவின்
பகுத்தறிவு ஆயுதமேந்தி
அரசியலில்
பகடைக்காய்களாகாமல்
ஒன்றுபட்ட
பெருஞ்சமூகமாய்
பகைகளை முறிக்கும்
ப(க)டைகளாக்குவோம்"[5] **புதிய கோடாங்கி, மே** 07, ப. 22

விடுதலையென்று கூறிச் சென்ற பாபாவின் பகுத்தறிவு ஆயுதமேந்தி அரசியலில் ஈடுபடாமல், தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பகையை முறிக்க வேண்டும் என்பதை இக்கவிதை எடுத்துக்காட்டியுள்ளது.

'வழிதேடு' என்ற கவிதை, தலித் மக்களின் விழிப்புணர்வைப் பற்றிப் பேசுகிறது. கல்வியின் மூலம் அறியாமையை நீக்கிப் பொருள் தேடி, தன்மானத்துடன் வாழ, முன்னேற்றம் அடையப் பொருள்தேடு, இவற்றை அடைந்தால் சாதி, மதத்திற்கு முடிவு கட்டலாம் என்று வலியுறுத்துகிறது.

"...ஆரியம்கடை விரித்த மனுதர்மம் விலைபோ காமல்
அழிந்துகடைகட்டிக் கொண்டது நம்மண்ணில் தோற்று
வீதிவுலாசெல்! மக்கள்துயர் துடைக்க - கல்வி
விதியென்னும் மடமைக்குப் போர்வாள் நாளும்
மோதியெழும் சாதி மத சழக்கருக்குச் சூடு இடு"[6]

புதிய கோடாங்கி, அக். 07, ப. 28

"வெகுவிரைவில்", என்னும் மற்றொரு கவிதையும் விழிப்புணர்வைத் தூண்டி மக்களை விழித்தெழச் செய்யும் வகையில் அமைந்துள்ளது.

"பறையா என்கிறாய்
பல்லைக் கடித்துக் கொள்கிறோம்".
மிருகங்களாகிய உங்களை
மனிதர்களாய் நாங்கள்
மாற்ற முயற்சிப்பதால்"[7] **புதிய கோடாங்கி, மார்ச்** 07, ப. 50

உயர்சாதிக்காரர்கள் மனிதர்களாக மாறவில்லையென்றால், இந்த மிருகங்களை மனிதர்கள் வெகுவிரைவில் வேட்டையாடுவார்கள் என்று இக்கவிதை தலித்மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாகும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

தீண்டாமையைப் பற்றித் "தீட்டு", "இந்தியா இரண்டு வகைப்படும்" (ஜே. மோஹன்), "இல்லாதிருத்தல்" (ப்ரதிபா ஜெயசந்திரன்) முதலிய கவிதைகள் குறிப்பிட்டுள்ளன.

"தனிக்குவளையில்
தண்ணீர் கேட்டேன்!
எதற்கு என்றான்?
பொதுக் குவளையில்
நான் குடித்தால்
தீட்டு எனக்கென்றேன்!
திருதிருவென முழித்தான்
தேநீர்க் கடைக்காரன்."[8] **புதிய கோடாங்கி, மார்ச்** 07, ப. 44

இவ்வாறு தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிப் பல கவிதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் ஒடுக்குதலுக்கு முற்படும் இந்து மதப் பெருந்தெய்வங்களையே கேள்விக் குறியாக்குகிறது. அன்பாதவனின் 'யோசி நீ கறுப்பா' என்னும் கவிதை.

"எரிந்த பிணத்தில்
இருக்கிற சாம்பல் வாடையில்
உதிர்ந்த குருதியில்
வீசும் கவுச்சி நாற்றத்தில்
புதைந்த உடலின்
மண் மேட்டிலிருந்து
பீறிட்டு எழும்
எம் உணர்வுகளில்
சாதீய சனாதனங்கள்
தரை மட்டமாய் நொறுங்கும்
தளர்ந்து விடாதே!
முதலும் வட்டியுமாய்
சேர்ந்தே தர
திமிறி எழுகிறது"[9] **புதிய கோடாங்கி, நவ. 2000; ப. 65**

மேலும், இட ஒதுக்கீடுகள் வேண்டாம், எங்கள் உரிமைகளைக் கொடுத்தால் போதும் என்று விழிப்புணர்வை ஊட்டக்கூடிய கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

"ஒதுங்கியும் போறாவ
ஒதுக்கியும் வைக்கிதாவ
சாதியப் பாத்தும்
சோலிய நெனச்சும்...
அந்தச்
சக்கிலியக் கொமரி
தனியா வந்தா மட்டும்
சரசமாட நெனைக்கிதானுவ"[10] **புதிய கோடாங்கி, மே.07, ப. 14**

எனும் கவிதை ஆதிக்கச் சாதிக்காரர்களின் செயல்களைத் தோலுரித்துக் காட்டுகிறது. இத்துடன் தலித்துகளுக்கு ஆதிக்கச் சாதிக்காரர்களால் ஏற்படும் அவலநிலைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சாதியக் கொடுமைகளால் தலித்துக்கள் உயிர்வதைப் படுவதை எதிர்த்து அபிமானியின் குரல் மற்றொரு கவிதையில் பின் வருமாறு வருகிறது.

“ஆனாலும் ஒன்று...
யாராலும் மறுத்துவிட முடியாது -
ஆதிக்கத்தையும்
அரசு எந்திரத்தையும்
தகர்த்தெறியும் தைரியம்
தலித்துக்களுக்கே உண்டெண்பதை”[11] **புதிய கோடாங்கி, மே.**07, **ப.**15

இவ்வாறாக ‘தெரிவு’, ‘இளவரசனின் மரணம்’, ‘நட்சத்திரங்கள் பேசும் மொழி’, ‘அவனும் அதுவும்’, ‘பிச்சைக்காரர்களின் பயணம்’, ‘எது வரப்போகிறது?’, ‘கனவு’, ‘அது’, ‘காத்திருப்பு’, ‘புதைக்கப்பட்ட இறைவனுக்கு புதைந்துகொண்டிருக்கும் மனிதர்களிடமிருந்தும்’, ‘இன்றும்’, தா. பாலகணேசன் கவிதை, வாசுதேவன் கவிதை, சு. வில்வரத்தினம் கவிதை, முதலிய கவிதைகள் ஆதிக்கச் சாதிகளின் அவலச் செயல்களைக் கூறுபவையாகவும், அச்செயல்களை தலித்துகள் எதிர்த்து நிற்கக் கூடியவர்களாக இருப்பதையும் பதிவு செய்துள்ளன.

“இப்போதெல்லாம்
மனித உயிர் ஒன்று
மண்ணில் கொல்லப்படும்போது
நட்சத்திரம் கண்சிமிட்டுவதாக என்
மகன் சொல்கிறான்...”[12] **தலித்,பிப்.** 07, **ப.** 21

முடிவுரை

இவ்வாறாகப் பழைய மரபுகளை எதிர்த்து நிற்கக் கூடிய செயல்களை மேற்கொள்வதையும், காலங்காலமாக உருவாக்கப்பட்ட மொழிகளில் எழுதுவனவற்றைக் கட்டுடைப்பதையும், அம்மரபில் வந்த மொழியால் ஒடுக்கப்பட்ட மக்களாலும் எழுதமுடியும் என்பதையும், ஒடுக்குமுறைகளைக் கண்டு எதிர்த்து நிற்பதையும் தலித் கவிதைகள் வழி தலித் மக்களின் மாற்றுப் பண்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன.

துணைநூற்பட்டியல்

1. அன்பு பொன்னோவியம். *உணவில் ஒளிந்திருக்கும் சாதி*. சென்னை, சித்தார்த்தா பதிப்பகம், 2007.
2. பா, இதய வேந்தன் விழி. *தலித் இலக்கிய அரசியல்*. சென்னை, வள்ளிசுந்தர் பதிப்பகம், 2004.
3. ஆ, சிவசுப்பிரமணியன். *அடித்தள மக்கள் வரலாறு*. சென்னை, மக்கள் வெளியீடு, 2002.
4. பூர்ணச் சந்திரன். *தமிழ் இலக்கியத்தில் ஒடுக்கப்பட்டோர்*. தஞ்சாவூர், அகரம் வெளியீடு, 2004.
5. அ, மார்க்ஸ். *தலித் அரசியல்*. பாண்டிச்சேரி, நிறப்பிரிகை வெளியீடு, 1994.
6. மோகன்லார்பியர். *தலித் விடுதலைக்கான அரசியல்*. மதுரை, தலித் ஆதார மையம், 1998.
7. யாழினி முனிசாமி. *தலித் இலக்கியமும் அரசியலும்*. சென்னை, இருவாட்சி வெளியீடு, 2007.
8. து, ராஜா. *தலித் பிரச்சினை முன்னோக்கிய பாதை*. சென்னை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2007.
9. ராஜ் கௌதமன். *தலித்திய விமர்சனக்கட்டுரைகள்*. சென்னை, காலச்சுவடு, 2003.

REFERENCES

1. Anbu Ponnoviyam. *Caste Hidden in Food*. Chennai, Siddhartha Publishing House, 2007.
2. Pa, Ithiya Vendan Vizhi. *Dalit Literary Politics*. Chennai, Vallisundar Publishing House, 2004.
3. A, Sivasubramanian. *History of the Foundation People*. Chennai, People Publication, 2002.
4. Purna Chandran. *Oppressed in Tamil Literature*. Thanjavur, Akaram Publication, 2004.
5. A, Marx. *Dalit Politics*. Pondicherry, Apartheid Publication, 1994.
6. Mohanlarpier. *Politics for Dalit Liberation*. Madurai, Dalit Resource Centre, 1998.
7. Yashini Munisamy. *Dalit Literature and Politics*. Chennai, Bivatshi Publication, 2007.
8. Du, Raja. *Dalit Issue Path Forward*. Chennai, New Century Book House (B) Lit, 2007.
9. Raj Gowdhaman. *Dalit Review Articles*. Chennai, Kalachuvadu, 2003.
10. Dalit Human Rights (organized). London, VOD International, 2000.